வாசகர் கடிதம்

தலை சுத்துது!

நாங்க எழுதி அனுப்புறதெல்லாம் ஒரு பேப்பர் ரில வருமோ தெரியாது. எண்டாலும் ஒரு ஆசையில சில விசயங்களை உங்களுக்கும் தெரியப் படுத்தினா நல்லதெண்டு எழுதி அனுப்புறம். நீங்க பார்த்து போட்டு இது நமக்கு தெரிந்த ஆட்களின் விசயம் ஏன் போட்டு கஸ்டபடுத்துவான் என்று போடாமலும் விடுவீர்கள்..சரி விசயம் இது தானுங்கோ.

நாங்கள் எல்லாரும் இப்ப ஒரு விடயத்தையே பேசிக் கொண்டு இருக்கிறம். எங்கள் தேசத்தின் ஒரு பகுதி மக்கள் படும் அவலம், இராணுவ முற்றுகை, ஈழத் தமிழரின் சோக நிகழ்வுகள்.

அதற்கிடையில் தமிழக மக்களின் எழுச்சியும் ஈழத்தமிழருக்கான ஆதரவுகோசங்களும் எல்லாத் துக்கும் முத்தாய்ப்பாய் வைச்ச மாதிரி சினிமா நட்சத்திரங்கள் நடத்திய ஒரு நாள் உண்ணாவிரத போராட்டம்எல்லாம் நடந்தது. இவை எல்லாம் நடந்து கொண்டு இருக்க இங்க இலண்டனில ஈழத்தில இருந்து பெரும் கஸ்டங்களோடு வந்து பதி வைத்த ஒரு கூட்டம் தமிழ் வளர்க்கிறதுக்காக தெற்கு இலண்டன் தமிழ் பாடசாலை (குறைடன் பகுதி) என்ற பெயரில் தமிழ் பள்ளி நடத்துகினம்.

அந்த பள்ளிக்கூடக்காரர் தமிழக சினிமாக்காரர் எங்களுக்காக அடையாள உண்ணாவிரத போராட்டம் நடத்தின நாளன்று இவை தீபாவளி விழா கொண்டாடினவை. அதை விழா என்றதை விட ஒரு பார்ட்டி என்று சொல்லலாம்.விதம் விதமான இறைச்சிவகைச் சாப்பாடுகள்,மறைவில வைச்சு விரும்பினவைக்கு ஏற்ற மாதிரி குடிபான வகைகள், இடைக்கிடை பிள்ளைகளின் நிகழ்ச்சிகள், வண்ண விளக்குகளில் பெரியோர் சிறியோர் என நடன ஆட்டங்கள் என ஒரே கொண்டாட்டம். வந்த சனம் எல்லாம் நல்ல சந்தோசமா சாப்பிட்டு டான்ஸ் ஆடி போட்டு அவர்களின் வாயில வந்த மாதிரி உரையாடல்களையும் முடிச்சுப் போட்டு போட்டினம். தப்பித்தவறி ஒருத்தர் கூட அங்க வன்னியில என்ன தான் நடக்குது எண்டு ஒரு சொல்லுக்கு பேசினது கிடையாது.

தமிழ் வளர்கிற ஈழ தேசத்தவர்களும் அருமை யாக ஒரு நிகழ்ச்சியை ஒழுங்கமைச்சு சந்தோ சமாக முடித்து விட்டோம், உதவி செய்த அனை வருக்கும் நன்றி எண்டார் பள்ளி நிர்வாகத்தில இருக்கிற ஒருத்தர்.

சரி எங்கட புலம் பெயர் ஈழத்தமிழரே, இன்றைய தாயக தமிழரின் நிலைகண்டு கலங் காமல், கவலைப்படாமல் தாங்கள் சந்தோசமாக இருக்க,தாங்கள் சார்ந்திருகின்ற அமைப்புக்களும் இப்படியான களியாட்டங்களை எந்த சோகம் வந்தாலும் நிறுத்தி வைக்காமல் தங்கள் சந்தோசத் திற்காக நடத்தியே ஆக வேண்டும் என்று நிற்கும் போது ஏன் தமிழக மக்கள் தமிழக கலைஞர்கள் எங்களுக்காக குரல் கொடுக்க வேண்டும். உதவி செய்ய வேண்டும் என்று எதிர்பார்க்கின்றீர்கள்? அவர்கள் மேல் கோபப்படுகின்றீர்கள்.

ஏன் இந்த பள்ளிக்கூட நிர்வாகத்திட்ட ஒருத்தர் கூட கோபப்பட இல்லை? அல்லது கண்டிக்க வில்லை. ஆனா நடிகர் அஜித்துக்கு மாத்திரம் செருப்பால அடிக்கோணும் எண்டு கோபப் டுகிறீர்கள். அதுக்கிடையில இந்த பள்ளிக்கூடம் அடுத்த வருடம் 25 ஆண்டு நிறைவு விழா கொண்டாடப்போகுது.கவனம் பிரதம விருந்தினரா அஜித் வந்தாலும் வருவார். நிர்வாகக்காரர் என்ன செய்தாலும் ஒன்றும் சொல்ல மாட்டம் பெற்றோர் ஆகிய நாங்கள். சந்தோசம் தான் முக்கியம்.

- திலீபன்

சவாலே... சமாளி!

செப்டெம்பர் 12 திகதி வெளியான ஒரு பேப்பர் ரில் வெளிவந்த சபேசனின் சவால் எனக்கு மிக ஆச்சரியத்தைத் தந்தது. இவர் சமஸ்திருத மொழியைக் கற்றுத் தேர்ந்திருப்பது வரவேற் புக்குரிய விசயம். அதேபோலத் தமிழில் திருமணச் சடங்குகள் பூசைகள் செய்ய முயற்சித்திருப்பதும் ஒரு நல்லவிசயமே.

எதையும் அறிந்து செய்யும் போது நிறைவு ஏற்படுகின்றது. ஊரில் எந்தவிதச் சடங்குமுறை களையும் பெரியவர்கள் முன்னின்று நடத்துவது வழக்கம். எவரும் அர்த்தம் கேட்பதோ புரிந்து கொள்ள முயற்சிப்பதோ கிடையாது.

சபேசனின் கட்டுரையையோ அவர் எழுதிய புத்தகத்தையோ படிக்கும் வாய்ப்பு எனக்குக் கிடைக்கவில்லை. ஆனால் பல சஞ்சிகைகளில் சமஸ்கிருத ஸ்லோகத்திற்குத் தமிழில் எழுதிய பொருளைப் படித்திருக்கிறேன். வேங்கட சுப்ர பாதம், வால்மீகியின் சுந்தர காண்டம் என்பவற்றை வாசித்த போது எவ்வளவு அழகான ஆழமான கருத்துக்களைக் கொண்டிருக்கின்றனவே என்று வியப்படைந்தேன். இதில் எந்தவிதமான விசயத்தையும் காணமுடியவில்லை.

தமிழ்க் காப்பியங்களில் விரகதாபங்களைச் சித்தரிக்கும் இடங்கள் வருகின்றன. திருக்குறளில் அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால் என்று மூன்று பகுதிகள் இருப்பதை அறிவீர்கள். காமம் என்பது வாழ்வில் முக்கியமான ஒரு பகுதி. எல்லா உயிரினங்களுக்கும் பொதுவானது. உலகத்தை இயங்கி ஓடவைக்கிறது. அது தவறாகப் பயன்படுத்தப்படும் போது அழிவை ஏற்படுத்துகிறது. நீர், நெருப்புப் போன்றவை மனிதனுக்குத் தேவைப்படுவதனால் அவை மனிதனை அழிக்கவும் செய்கிறது. எனவே எதுவும் பார்க்கும் விதத்திலும் பயன்படுத்தும் விதத்திலும் உள்ளது.

பூசாரிகளைப் பொறுத்தவரை அது அவர்களது தொழில். கோயிலில் எப்படி பூசை, அபிசேகம் செய்வது. கும்பாபிசேகம் வைப்பது இவற்றையே அவர்கள் கற்றிருப்பார்கள். அவர்கள் சமஸ் கிருதத்தில் தேர்ச்சி பெற்று வாதிட வல்லவர்கள் என எதிர்பார்க்க கூடாது. சமஸ்கிருதத்தை அப்படியே தமிழில் எழுதிப் படித்தவர்களாகக் கூட இருக்கலாம்.

இவர்கள் தம் தொழிலையே சரியாகச் செய்யாத போது தவறுகள் பல நேர்ந்திருப்பதையும். நாம் காணக் கூடியதாக இருக்கின்றது. எங்கேயும் முழுமையாகக் காண்பது அரிது.

சபேசன் அவர்களே! இந்தியாவில் சமஸ் கிருதத்தை கற்றுத் தேர்ந்து, தெளிந்த வல்லு னர்கள் பலர் இருக்கின்றார்கள். நீங்கள் அவர்க ளுடன் சென்று வாதிட்டு வென்று வாகை சூடி வாருங்கள். நாங்களும் உங்களுக்கு பூமாலை மட்டுமன்றி பாமாலையும் சூட்டி வரவேற்கிறோம்.

- தவம்

சபேசன் நீயுமா?

தமிழ்த் தேசியம் தொடர்பாகவும் வன்னிக் கள நிலவரம் தொடர்பாகவும் மிகவும் நம்பகத் தன்மையுடனும் கருத்துச் செறிவாகவும் தனது அரசியல் அலசலைத் தந்து கொண்டிருந்தவர் சபேசன்.

ஆனால் திடீரென திராவிட முன்னேற்றக் கழகத்தின் பிரச்சாரச் செயலாளர் போல கடந்த இதழில் ஒரு அலசலை எழுதி எம்மையெல்லாம் அதிர்ச்சிக்கும் ஏமாற்றத்திற்கும் ஆளாக்கி விட்டார்

'தி.மு.க நாடாளுமன்ற உறுப்பினர்கள் தம் பதவிகளை இராஜினமாச் செய்தால் கலைஞரின் ஆட்சி இல்லாமல் போவ தோடு கலைஞரையும் இந்தத் தள்ளாத வயதில் சிறையில் தான் பார்க்க நேரிடும்' என்று கவலைப்படும் சபேசன் தனது காவல் துறையை ஏவிவிட்டு ஐயா பழ. நெடுமாறனைக் கைது செய்யும் 'களை' ஞரின் செயல் குறித்து அறியாமல் இருக்கின்றாரா?

அரசியல் பழிவாங்கல்களுக்கான கைது களை மேற்கொள்வதும் கட்சிகளை உடைப்பதும் கலைஞருக்கும் கைவந்த கலையே என்பதையும் சபேசன் அறிய மாட்டாரா?

'இதுவரை நடந்த போராட்டங்களினால் கலைஞருக்கும் தமிழீழ மக்களிற்கும் சில நன்மைகள் ஏற்பட்டிருக்கின்றன ' என்று குறிப்பிட்ட சபேசன் அந்த நன்மையாகக் குறிப்பிடுவது திமுகவும் பாட்டாளி மக்கள் கட்சியும் நெருங்கி வருகின்றன என்ற விடயத்தைத் தான்.

ஆனால் நானறிந்த வரையில் மத்திய அரசிற்குத் தனது வலிமையைக் காட்ட, கனிமொழிக்கு அமைச்சர் பதவிதராததால் தனக்கு ஏற்பட்ட ஏமாற்றத்துக்காக மத்திய அரசைச் செல்லமாகக் கோபிக்க, அவர் ஈழத்தமிழர்களின் துன்பத்தை, வலியைப் பாவித்துக் கொண்டார் என்பது தான் உண்மை

தனது எழுத்து வன்மையால் கலைஞ ருக்கு வக்காலத்து வாங்கப் புறப்பட்ட சபேசன் தனது பழுத்த அரசியல் அநு பவத்தை வைத்து பழ நெடுமாறன் ஐயா அவர்கள் கூறியுள்ள "உலகத் தமிழர் களைக் கருணாநிதி மீண்டும் ஒருமுறை ஏமாற்றி விட்டார், இலங்கைத் தமிழர் களுக்கு எதிரான கருணாநிதியின் தவறு களை வரலாறு மன்னிக்காது, கருணா நிதி நடத்தும் நாடகத்திற்கு மற்றக் கட்சிகள் உதவவில்லை என்பதற்காக அவர் வாயில் வருவதை எல்லாம் பேசுகி றார்" என்பது போன்ற கருத்துக்களையும் மனதில் கொள்ள வேண்டும்.

சிலரைச் சமாதானப்படுத்துவதற்காக அல்லது ஆசுவாசப்படுத்துவதற்காக தவ றான கருத்துக்களைப் பரப்பி தமிழகத்தின் எழுச்சியை திட்டமிட்டு மழுங்கடித்த களைஞருக்கு வக்காலத்து வாங்காமல் தொடர்ந்து தரமான கட்டுரைகளைத் தருவீர்கள் என்று நம்புகிறேன்

- விதுரன்

பயோடேற்றா

மதிக்கப்பட்ட பெயர்: கருணா அம்மான்.

மதிப்பிழந்த பெயர்: முரளிதரன்.

தொழில்: நக்குவது.

உபதொழில்: காட்டிக்கொடுப்பு, கடத்தல். கப்பம்

பொழுது போக்கு: துரோகம் செய்வது

சாதனை: கிழக்கு மாகாண தமிழ்மக்களின் ஒட்டுமொத்த உரிமைகளையும் உணர்வு களையும் சிங்களத்திடம் அடகு வைத்தது.

சோதனை: பிள்ளையான்.

வேதனை : இங்கிலாந்தின் சிறைவாசம்.

நண்பர்கள். அண்மைக் காலமாக தேவானந்தா.

எதிரிகள்: தன்மானமுள்ள உலகத் தமிழர்கள் அனைவரும்.

இலட்சியம்: எதுவுமே கிடையாது.

பிடித்த பாடல்: எங்கே செல்லும் இந்தப் பாதை, யார்தான் யார்தான் அறிவாரோ (படம். சேது).

மறந்தது: தமிழீழம்.

நினைப்பது:மகிந்தா,கோத்தபாய.

புலம்பல்:'அரசனை நம்பி புருசனை கைவிட்ட' தெண்ட பழமொழி எனக்குத் தான் பொருந்தும். அரசாங்கத்தை நம்பி பெண்டாட்டி பிள்ளையளையும் கைவிட்டிட்டன். இப்ப கோட் சூட்டை வேறை மாட்டி பார்லிமென்ருக்குள்ளை தள்ளி விட்டிட்டாங்கள். அறிக்கை வேறை விட வேண்டிக் கிடக்கு ஐயோ..ஐயோ..

- சாத்திரி

வியாபாரம் பெருக விளம்பரம் வேண்டும்.
ஒரு பேப்பர் அடிக்கவும் விளம்பரம் வேண்டும்.
ஒரு பேப்பர்

உங்கள் தேவை எங்கள் சேவை

வியாபார நிலையம் வாங்க
விற்க குத்தகைக்கு எடுப்பதற்கு,
உங்கள் வசதிக்கும் வல்லமைக்கும்
ஏற்ப சிறப்பான வழிகாட்டலுக்கு
தனித்துவமான எம்மை நாடுங்கள்

பிரித்தானிய குடிவரவு விசா

தற்போது நடைமுறையிலிருக்கும்
புள்ளி அடிப்படையிலான முறையின்
கீழ் சரியான ஆலோசனை
வழங்கப்படும்

Indra Sebastian Solicitors
Administrators of Oaths

Tel: 020 8427 3303 Fax: 020 8427 3313
144 Station Road, Harrow, Middlesex HA1 2RH
Website: issolicitors.co.uk | Email: info@issolicitors.co.uk

Conveyancing - Sale, Purchase & Lease of Commercial and Residential Properties and all other types including landlord & Tenant disputes

Intellectual Property
Protect your business and goodwill. Trademarks, Copyrights & Patents Litigation/Debt Collection/Business, Disputes

Matrimonial - Divorce & Ancillary, Proceedings Employment

- Immigration
- Home Office Same Day Visa Service
- Work Permits, HSMP, SEGS
- Business Persons
- Doctors - Medical Training Initiatives
- Care Homes - Cares & Nurses
- Hospitality - F&B, Receptionist, Waiters etc.
- Skilled Workers & Domestic Servants
- Marriage & Certificate of Approval
- Asylum & Human Rights
- European Applications (EEC, WRS)
- Entry Clearance & Visa Refusals Appeal
- Students
- Nationality (UK & Sri Lanka)
- Long Term Residency in UK